

நீலகிரி மாவட்டம், உதகை பழங்குடியினர் பண்பாட்டு மையத்தில் நேற்று முன்தினம் (11.01.2025) நடைபெற்ற அரசு விழாவில், நீலகிரி நாடாளுமன்ற உறுப்பினர் ஆ.இராசா, மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி லட்சுமி பவ்யா தண்ணீரு முன்னிலையில், ரூ.5.22 கோடி மதிப்பீட்டில் முடிவுற்ற 19 திட்டப்பணிகளை பொதுமக்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைத்து, 170 பயனாளிகளுக்கு ரூ.6.15 கோடி மதிப்பீட்டில் பல்வேறு அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். உடன் கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) கௌசிக், உதகை நகரமன்றத்தலைவர் திருமதி.வாணீஸ்வரி உட்பட பலர் உள்ளனர்.

### மும்பையில் உள்ள அடல் சேது பாலம் போன்று

# தனுஷ்கோடியில் இருந்து இலங்கைக்குப் பாலம் அமைக்கப்படுமா?

## சட்டப்பேரவையில் பேரவை துணைத் தலைவர் கு.பிச்சாண்டி கேள்வி!

சென்னை, ஜன.13-

மும்பையில் உள்ள அடல் சேது பாலம் போன்று தனுஷ்கோடியில் இருந்து இலங்கைக்கு பாலம் அமைக்கப்படுமா என்று சட்டப்பேரவையில் பேரவை துணைத் தலைவர் கு.பிச்சாண்டி கேள்வி எழுப்பினார்.



இதுகுறித்து பேரவையில் நடைபெற்ற விவாதம் வருமாறு:-

**கு.பிச்சாண்டி:** மும்பையில் உள்ள அடல் சேது பாலம் போன்று தனுஷ்கோடியில் இருந்து இலங்கைக்கு பாலம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

**அமைச்சர் எ.வ. வேலு:** ‘சிங்களத் தீவினுக்கோர் பாலம் அமைப்போம்;

சேதுவை மேடுறுத்தி வீதி சமைப்போம்;’

என்று நூறாண்டு காலத்திற்கு முன்னாள் இப்படி ஒரு பாடலை மகாகவி பாரதி அவர்கள் பாடி வைத்தார். இது இரண்டையும் இணைக்க முடியும் என்று அவருக்கு ஒரு நம்பிக்கை. நூறாண்டு காலம் கழித்து நம்முடைய துணைப் பேரவைத் தலைவர் கு. பிச்சாண்டி அவர்கள் இப்போது பாலம் அமைக்கப்படுமா என்று ஒரு கேள்வி எழுப்பியிருக்கிறார்கள்.

இலங்கையில் நடைபெற்று வருகிற உள்நாட்டுப் போர், சுற்றுச்சூழல் பாதிப்பு போன்ற காரணங்களால் இந்தியாவை இலங்கையோடு இணைக்கும் பாலம் அமைக்கும் திட்டம் கனவுத் திட்டமாகவே இன்றுவரை இருந்துகொண்டிருக்கிறது. கடந்த 2015 ஆம் ஆண்டு இலங்கைப் பிரதமர் இரணில் விக்ரமசிங்கே இந்தியாவிற்கு வருகை தந்த போது தனுஷ்கோடி முதல் தலைமன்னார் வரை சுரங்கப் பாலம் அமைக்கலாம் எனும் யோசனையை இந்தியாவின் சார்பாக தெரிவிக்கப்பட்டு முன்னெடுப்புக்கு எடுத்துக்கொண்டோம். ஆனால், அந்தத் திட்டத்திற்கு இலங்கை அரசு மறுப்பு தெரிவித்த நிலையில், சுரங்க சாலைப் போக்குவரத்து பாலம் அமைக்கும் திட்டம் கைவிடப்பட்டது.

இந்தச் சூழ்நிலையில் 14.7.2022 அன்று நானும், நெடுஞ்சாலைத் துறையினுடைய கூடுதல் தலைமைச் செயலாளர் பிரதீப் யாதவ், அன்றைய தலைமைப் பொறியாளர் சந்திரசேகர், பாலமுருகன், Capt. M. Anbarasan, அந்தப் பகுதியினுடைய சட்டமன்ற உறுப்பினர் காதர்பாட்ஷா என்கிற முத்துராமலிங்கம் ஆகியோருடன் தனுஷ்கோடிக்கு நேரடியாகவே குறிப்பாக அரிச்சல் பகுதிக்குச் சென்று இங்கிருந்து பாலம் கட்டலாமா அல்லது கப்பல் விடலாமா என்று ஆய்வு செய்தபோது, தனுஷ்கோடியி லிருந்து தலைமன்னார் சுமார் 23 கிலோமீட்டர் தூரம் இருக்கிறது. இந்த நிலையில் 2023 ஜூலை மாதம் இந்தியாவிற்கு வருகைதந்த இரணில் விக்ரமசிங்கே மீண்டும் இந்தப் பேச்சுவார்த்தையை இந்தியாஇலங்கை இணைக்கும் வகையில் சாலைப் போக்குவரத்துப் பாலம் மற்றும் pipeline அமைப்பதற்கான திட்டம் முன்மொழியப்பட்டது. பாலம் அமைப்பது என்பது இரு நாடுகள் சம்பந்தப்பட்ட பிரச்சினை. எனவே, முதலமைச்சர் அவர்களிடம் உரிய அறிவுரையைப் பெற்று, மீண்டும் ஒன்றிய அரசாங்கத்திற்கு அழுத்தம் கொடுக்கிற வகையில், ஒரு கடிதத்தை அரசின் சார்பாக எழுதப்படும் என்று இந்த நேரத்திலே உறுப்பினர் அவர்களுக்கு நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அந்தக் கேள்வியிலே இன்னொரு கேள்வியையும் அவர் கேட்டிருக்கிறார். மும்பையிலே அடல் சேது பாலம் போன்று சென்னையிலே போக்குவரத்து நெரிசலைக் குறைக்க பாலம் அமைக்க முடியுமா என்ற ஒரு கேள்வியை அதிலே கொடுத்திருந்தார்கள். கலங்கரை விளக்கத்திலிருந்து நீலாங்கரை வரை சுமார் 15 கிலோமீட்டர் தூரம் என இணைப்பதற்காக கடல் மேலே பாலம் அமைப்பதற்காக விரிவான சாத்தியக்கூறு இருக்கிறதா என்பதை DFR மூலமாக தொடர்ந்து திட்ட அறிக்கை மேற்கொள்கின்ற பணியிலே நெடுஞ்சாலைத் துறை ஈடுபட்டிருக்கிறது.

**கு.பிச்சாண்டி:** இராமயணத்திலே இராமர் இலங்கைக்குப் பாலம் கட்டியதாக இருக்கிறது. ஆகவே, நம்முடைய அமைச்சர் அவர்கள் அதற்கான விளக்கங்களை இங்கே சொன்னார்கள். வேறொரு நாட்டின் அனுமதி பெற்று, கட்ட வேண்டும் என்று சொல்லியிருக்கின்ற காரணத்தால், Navi Mumbaiல், கடல்வழியாக 22 கிலோ மீட்டருக்கு அடல் சேது பாலம் 17,760 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ளது. அதற்கு ஒன்றிய அரசு தான் நிதி அளித்திருக்கிறது. இங்கே அதிகளவில் போக்குவரத்து நெரிசல்கள் இருக்கின்ற பகுதிகளிலெல்லாம், அவ்வாறு கடல்வழியாக நாம் பாலம் அமைத்தால், இடம் கையகப்படுத்தவேண்டிய அவசியம் இருக்காது. ஆகவே, கடல்வழியாக பட்டினப்பாக்கத்திலிருந்து மகாபலிபுரம் வரை அந்தப் பாலத்தை அமைத்தால், அதன்மூலம் traffic நெருக்கடியைக் குறைக்கக்கூடிய வாய்ப்பு இருக்கிறது.

அதற்காக, மும்பையில் கடல்சார் வாரியம் என்று தனியாக அமைத்து, இன்றைக்கு மூன்றுக்கு மேற்பட்ட பாலங்களைக் கட்டியிருக்கிறார்கள். அதேபோல, கொச்சியில் அதிகளவு பாலங்கள் கடலிலே கட்டப்பட்டிருக்கின்றன. ஆகவே, நம்முடைய நெடுஞ்சாலைத் துறையும் இந்தப் பாலங்களை அமைப்பதற்காக தனியாக கடல்சார் வாரியம் என்று உருவாக்கி, அதன்மூலம் கடலில் பாலங்களைக் கட்டும்போது, இடம் கையகப் படுத்த வேண்டிய தேவையில்லாத காரணத்தாலும், trafficஐ சரிசெய்யக்கூடிய வாய்ப்பு உள்ள காரணத்தாலும், பட்டினப்பாக்கத்திலிருந்து மகாபலிபுரம் வரை அப்பணிகளைச் செய்வதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்பு கிறேன்.

**அமைச்சர் எ.வ. வேலு:** இந்த அரசுக்கு நல்ல ஆலோசனையை அளித்திருக்கிறார்கள். பொதுவாக, இதற்கென்று வாரியம் உருவாக்கப்படுமா என்று கேட்கிறார். ஏற்கெனவே, கடல்சார் வாரியம்Maritime Board என்று தமிழக அரசின் சார்பாக ஒரு வாரியம் இருக்கிறது. ஏற்கெனவே சிறு துறைமுகங்களை மேம்படுத்துகிற பணிகளில் அந்த வாரியம் ஈடுபட்டுக்கொண்டிருக்கிறது. அந்த வகையில், மும்பையில் அவர் சொன்ன அந்த அடல் சேது பாலத்திற்கு நானும் நேரடியாகச் சென்று பார்வையிட்டேன். அந்தப் பாலத்தில் நானும் பயணித்தேன். அதன் விளைவாகத்தான், இப்போது நம்முடைய கலங்கரை விளக்கத்திலிருந்து மகாபலிபுரம் என்பது நீண்ட தூரமாக இருக்கின்ற காரணத்தால், முதற்கட்டமாக, கலங்கரை விளக்கத்திலிருந்து நீலாங்கரை வரை உள்ள 15 கி.மீ. தொலைவுவரையிலான பணியை முதற்கட்டமாக எடுத்துக்கொள்ளலாம் என்ற அடிப்படையில், தற்போது அதற்கான திட்ட அறிக்கையைத் தயாரிப்பதில் துறையின் சார்பாக பொறியாளர்கள் ஈடுபட்டுள்ளனர். அப்பணி முழுமை பெற்றவுடன், ஒன்றிய நிதியிலிருந்து அதைச் செய்வதா அல்லது தனியார் பங்களிப்போடு செய்வதா அல்லது மாநில நிதியிலிருந்து செய்வதா என்பது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடன் கலந்துபேசி முடிவு செய்யப்படும்.

**கு. பிச்சாண்டி:** அமைச்சர் அவர்களுடைய பதிலுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். இன்றைக்கு வளர்ந்து வருகின்ற நம்முடைய சென்னை நகரத்தின் trafficஐ சரிசெய்வதற்கு, மத்திய அமைச்சராக டி.ஆர். பாலு அவர்கள் இருந்தபோது, கிண்டியில் 5 அடுக்குப் பாலங்கள் கட்டித்தரப்பட்டுள்ளன. ஆனால், அமெரிக்காவில் Dallas என்கின்ற மாகாணத்தில் 37 அடுக்குகள் கொண்ட பாலங்கள் அமைக்கப்பட்டுள்ளன. ஆகவே, வெளிநாட்டுப் பொறியாளர்களைக் கேட்டு, அவர்களுக்கு tender அளித்து, மிகவும் நெரிசலான இடங்களில், 20, 30 பாலங்களைக் கட்டி, அதன் மூலம் trafficஐ சரிசெய்வதற்கு நம்முடைய தமிழக அரசு முன்மாதிரியாக விளங்குமா? ஒன்றிய அரசு மற்ற மாநிலங்களுக்கு அதிகளவில் நிதியை ஒதுக்குகிறது. ஆனால், நமக்கு நிதி குறைவாக இருக்கிறது. நாடாளுமன்றத்தில் நமது நாடாளுமன்ற உறுப்பினர்கள் கேள்வி கேட்கும்போது, நிதின் கட்காரி அவர்கள் ‘நீங்கள் இடம் கையகப்படுத்தி வைத்திருந்தால் எவ்வளவு பணம் வேண்டுமானாலும் தருகிறேன்’ என்று சொன்னார்கள். ஆகவே, அவர்கள் தருகிறேன் என்று சொல்லியிருக்கின்ற காரணத்தால், இடத்தைக் கையகப்படுத்தும் செயல்பாடு இல்லாமல், கடலில் இது போன்ற முக்கியமான இடங்களில் பல்லடுக்குப் பாலங்களை, இப்படி 37 பாலங்கள் அமைக்கப்பட்டிருப்பதைப் போல, நம்முடைய தமிழகத்தில் அமைப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என அறிய விரும்புகிறேன்.


**அமைச்சர் எ.வ. வேலு:** நம்முடைய பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல, ஒன்றிய அரசாங்கத்திலிருந்து நிதி தருவதாக அப்பொழுது சொல்லப்பட்டது. தமிழ்நாட்டில் பல சாலைகளை விரிவாக்கம் செய்யவேண்டுமென்று நாமும் தொடர்ந்து பல கடிதங்களை எழுதிக்கொண்டிருக்கிறோம். இது ஒரு புறமிருக்கும்நிலையில், எப்படி ஒன்றிய அரசாங்கம் NHAI, அதாவது தேசிய நெடுஞ்சாலை ஆணையம் என்று ஒரு ஆணையத்தை வைத்திருக்கிறதோ, அதைப்போல தமிழக அரசின் சார்பாகவும் ஓர் ஆணையத்தை உருவாக்கலாம் என்று கடந்த சட்டமன்ற கூட்டத்தொடரிலேயே ஒரு ஆணையத்தை உருவாக்குவதற்கான சட்டத்தைக் கொண்டுவந்து, இந்த சட்டமன்றத்தில் நாம் இயற்றினோம்.

தமிழ்நாடு மாநில நெடுஞ்சாலைகள் ஆணையத்தின் மூலமாக, அவர் சொன்னதைப்போல வெளிநாட்டில் இருக்கிற பொறியியல் வல்லுநர்களையெல்லாம் அழைத்துவந்து, பாலங்களை அமைப்பதில் அவர்களுடைய ஆலோசனைகளைப் பெற்று, இங்கு பாலங்களை அமைக்க வேண்டுமென்று ஒரு கருத்தை சொல்லியிருக்கிறார்கள்.

இதுபோன்ற ஆணையத்தின் மூலமாக அது போன்ற பணிகளைச் செய்யலாம். தனியார் பங்களிப்பிலும் செய்யலாம் அல்லது உலக வங்கியில் கடன் வாங்கியும் செய்யலாம்; மாநில நிதியிலிருந்தும் செய்யலாம். அதற்காகத்தான், தனியாக நாமும் NHAI போன்ற ஒரு authority, அதாவது தமிழ்நாடு மாநில நெடுஞ்சாலை ஆணையம் என்ற ஒன்றை நாம் உருவாக்கிவிட்டோம். அந்த அடிப்படையில்தான், முதல்கட்ட மாக இப்போது அதிகமான போக்குவரத்து நெரிசல் உள்ள பகுதி எதுவென்று கணக்கில் எடுத்துக்கொண்டோம் என்று சொன்னால், சென்னையிலிருந்து மாமல்லபுரம் செல்கிற வழிதான் போக்குவரத்து நெரிசல் அதிகமாக இருக்கிறது. எனவே, அதைக் கணக்கில் எடுத்துக்கொண்டு, இப்போது முதல்கட்டமாக இந்த ஆணையத்தின் மூலமாக திருவான்மியூரிலிருந்து அக்கரை toll gate வரை, அதுவும் ஏறத்தாழ 15 கிலோ மீட்டர் தூரம்தான். அதுவும்கூட மேல்மட்ட பாலம், சிறப்பாக அதுவும் குறிப்பாக 6 வழிச் சாலையாக அதை அமைக்கலாம் என்ற ஓர் அடிப்படையில் ஆய்வு மேற்கொண்டிருக்கிறோம். முதல்கட்டமாக, தமிழ்நாடு மாநில நெடுஞ்சாலை ஆணையத்தின் மூலமாக செய்யலாம் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எங்களுக்கு ஆணையிட்டிருக்கிறார்கள். எனவே, அந்த ஆய்வை மேற்கொண்டிருக்கிறோம்.

பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல, சென்னையில் எங்கெங்கெல்லாம் போக்குவரத்து நெரிசல் அதிகமாக இருக்கிறதோ, அதுவும் சரி, மாநிலத்தில் இருக்கிற பிற மாநகராட்சிகளில் இருக்கின்ற போக்குவரத்து நெரிசலையும் கணக்கில் எடுத்துக்கொண்டு, இந்த ஆணையத்தின் மூலமாக வருங்காலங்களில் பாலங்கள் அமைக்கப்படும்.

இவ்வாறு விவாதம் நடைபெற்றது.



நாகை மாவட்டம், கீழையூர் மேற்கு ஒன்றியம், திருக்குவளையில் கழக இளைஞர் அணி செயலாளர், தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதிஸ்டாலின் அவர்களின் பிறந்த நாள் விழா பொதுக்கூட்டம் நடைபெற்றது. கூட்டத்தில் நாகை மாவட்டக் கழகச் செயலாளர் என்.கௌதமன் பேசினார். உடன் தலைமைக் கழக பேச்சாளர் பவானிகண்ணன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் இல.மேகநாதன், இளம் பேச்சாளர் ஆர்.அகிலா, கீழையூர் மேற்கு ஒன்றியக் கழகச் செயலாளர் சோ.பா.மலர்வண்ணன், பொதுக்குழு உறுப்பினர் கோசி.குமார், ஒன்றியக் கழகப் பொருளாளர் வை.சண்முகசுந்தரம், ஒன்றியக் குழு முன்னாள் தலைவர் ஆர்.ஜி.தமிழரசி மற்றும் பலர் உள்ளனர்.



திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சியரகத்தில் நேற்று முன்தினம் (11.01.2025) மாவட்ட ஆட்சித் தலைவர் மா.பிரதீப் குமார் தலைமையில் திருச்சிராப்பள்ளி நாடாளுமன்ற உறுப்பினர் துரை வைகோ, பெரம்பலூர் நாடாளுமன்ற உறுப்பினர் அருண் நேரு பங்கேற்ற பொங்கல் விழாவில் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் ஆர்வமுடன் கலந்து கொண்டு பொங்கலிட்டு கலைநிகழ்ச்சிகளில் பங்கேற்று குழு புகைப்படம் எடுத்துக் கொண்டு மகிழ்ச்சியை வெளிப்படுத்தினர்.

### பொங்கல் விழாவை முன்னிட்டு - மக்கள் சிரமமின்றி பயணிக்க

# தமிழ்நாடு முழுவதும் 44,580 பேருந்துகள் இயக்கம்!

## போக்குவரத்துத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் அறிவிப்பு!

சென்னை, ஜன.13-

பொங்கல் பெருவிழாவை மக்கள் சிரமமின்றி கொண்டாட சொந்த ஊர்களுக்கு பயணிக்கும் வகையில் 44,580 சிறப்பு பேருந்துகள் தமிழ்நாடு முழுவதிலும் இயக்கப்படுகின்றன என போக்குவரத்துத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.



அவரது அறிக்கை வருமாறு:-

தமிழர் திருநாளாம் தைப்பொங்கல் பெருவிழா கொண்டாட்டத்தை முன்னிட்டு பொது மக்கள் தங்கள் சொந்த ஊருக்கு சிரமமின்றி பயணிக்க முதலமைச்சர் அவர்களின் உத்தரவின் பேரில் 21,904 சிறப்பு பேருந்துகள் தமிழ்நாடு முழுவதும் இயக்கப்பட்டு வருகின்றன. அதேபோல பொங்கலை கொண்டாடி விட்டு திரும்பும் மக்களின் வசதிக்காக 22,676 பேருந்துகள் இயக்கப்பட இருக்கின்றன. ஆக மொத்தம் இந்த பொங்கல் பாண்டிகையை முன்னிட்டு பொது மக்கள் வசதிக்காக 44,580 பேருந்துகள் இயக்கப்பட உள்ளன.

ஜனவரி 10 முதல் 13ஆம் தேதி வரை சென்னையிலிருந்து வெளி ஊர்களுக்கு செல்லும் மக்களின் வசதிக்காக வழக்கமாக தினமும் இயக்கக்கூடிய 2,092 பேருந்துகளுடன் கூடுதலாக 5,736 சிறப்புப் பேருந்துகள் இயக்கபடுகின்றன. நான்கு நாட்களும் சேர்த்து 14,104 பேருந்துகள் இயக்கப்பட உள்ளன. அதேபோல பிற ஊர்களிலிருந்து ஜனவரி 10 முதல் 13 ஆம் தேதி வரை 7,800 சிறப்புப் பேருந்துகள் என மொத்தம் 21,904 பேருந்துகள் பொங்கல் பண்டிகை முன்னிட்டு தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகத்தால் இயக்கப்பட முடிவு செய்து இயக்கபட்டுவருகின்றன.

பொங்கல் பண்டிகையை கொண்டாடி முடித்துவிட்டு பிற ஊர்களிலிருந்து சென்னைக்கு திரும்பும் பயணிகளின் வசதிக்காக ஜன. 15 முதல் 19ஆம் தேதி வரை, தினமும் இயக்கக்கூடிய 10,460 பேருந்துகளுடன் கூடுதலாக 5,290 சிறப்புப் பேருந்துகளும், ஏனைய பிற ஊர்களிலிருந்து பல்வேறு ஊர்களுக்கு 6,926 என மொத்தம் 22,676 பேருந்துகளும் இயக்கப்படவுள்ளன. இதன்படி, பொங்கலுக்கு மொத்தம் 44,580 பேருந்துகளை இயக்க முதலமைச்சர் உத்தரவின் பேரில் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

பொது மக்கள் வசதிக்காக சென்னையின் நான்கு பேருந்து முனையங்களில் இருந்து தமிழ்நாட்டின் பிற பகுதிக்கு பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன.

1. கலைஞர் நூற்றாண்டு பேருந்து முனையம், கிளாம்பாக்கம் மஃப்சல் புறநகர் பேருந்து நிலையத்தில் இருந்து புதுச்சேரி, கடலூர், சிதம்பரம், திருச்சி, மதுரை, தூத்துக்குடி, செங்கோட்டை, திருநெல்வேலி, சேலம், கோயம்புத்தூர், கும்பகோணம் மற்றும் தஞ்சாவூர் மார்க்கமாக செல்லும் பேருந்துகள் இயக்கப்படுகின்றன.

2. கலைஞர் நூற்றாண்டு பேருந்து முனையம், கிளாம்பாக்கம் மாநகர் பேருந்து நிலையத்தில் இருந்து வந்தவாசி, போளூர் மற்றும் திருவண்ணாமலை மார்க்கமாக செல்லும் பேருந்துகள் இயக்கப்படுகின்றன..

3. கோயம்பேடு பேருந்து நிலையம்த்தில் இருந்து கிழக்கு கடற்கரை (இசிஆர்) சாலை வழியாக காஞ்சிபுரம், வேலூர், பெங்களூரு மற்றும் திருத்தணி மார்க்கமாக செல்லும் பேருந்துகள் இயக்கப்படுகின்றன.

4. மாதவரம் புதிய பேருந்து நிலையம்த்தில் இருந்து பொன்னேரி, ஊத்துக்கோட்டை வழியாக ஆந்திர மாநிலம் மார்க்கமாக செல்லும் பேருந்துகள் மற்றும் வழக்கமாக இயக்கப்படும் திருச்சி, சேலம், கும்பகோணம் மற்றும் திருவண்ணாமலை பேருந்துகள் இயக்கப்படுகின்றன.

அதோடு சென்னை மாநகரின் பல்வேறு பகுதியிலிருந்து கோயம்பேடு, கிளாம்பாக்கம், மாதவரம் பேருந்து நிலையங்களுக்கு பயணிகள் செல்வதற்காக ஜன. 10 முதல் 13ஆம் தேதி வரை கூடுதலாக 320 இணைப்புப் பேருந்துகளும் இயக்கப்படுகின்றன.


பயணிகள் சிரமமின்றி முன் பதிவு செய்யும் வகையில் கிளாம்பாக்கம் கலைஞர் நூற்றாண்டு பேருந்து முனையத்தில் 7 முன்பதிவு மையங்களும், கோயம்பேடு பேருந்து நிலையத்தில் 2 முன்பதிவு மையங்கள் என மொத்தம் 9 முன்பதிவு மையங்கள் திறக்கப்பட்டுள்ளன. இந்த மையங்கள் காலை 7 மணி முதல் இரவு 9 மணி வரை செயல்படும். மேலும், டிஎன்எஸ்டிசி செயலி மூலமும் www.tnstc.in எனும் இணையதளம் மூலமாகவும் பயணச்சீட்டை முன்பதிவு செய்துகொள்ள வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

முதலமைச்சர் அவர்களின் உத்தரவுப்படி தமிழ்நாட்டு மக்கள் சிறப்பான முறையில் பொங்கல் பண்டிகையை கொண்டாடி மகிழ, எந்தவித இடையூறும் இன்றி பயணிக்கும் வகையில் சிறப்பான முன் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.


மகிழ்ச்சி பொங்கட்டும்
மனம் நிறையட்டும்.

அனைவருக்கும் இனிய பொங்கல் மற்றும் தமிழ் புத்தாண்டு நல்வாழ்த்துகள்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.



மயிலாடுதுறை மாவட்டம், சீர்காழி கிழக்கு ஒன்றியம், திருவெண்காட்டில் நடைபெற்ற மாற்றுக் கட்சியினர், கழகத்தில் இணையும் நிகழ்ச்சியில் பூம்புகார், கீழையூர் பகுதிகளில் இருந்து 124 பேர் அக்கட்சியில் இருந்து விலகி மயிலாடுதுறை மாவட்டக் கழகச் செயலாளரும், பூம்புகார் சட்ட மன்ற உறுப்பினர் நிவேதா எம்.முருகன் முன்னிலையில் கழகத்தில் இணைந்தனர். உடன் சீர்காழி சட்ட மன்ற உறுப்பினர் எம்.பன்னீர்செல்வம், சீர்காழி சட்ட மன்ற தொகுதி பார்வையாளர் எம்.தினேஷ்குமார், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் ஜி.என்.ரவி, முத்து.மகேந்திரன், சீர்காழி கிழக்கு ஒன்றியச் செயலாளர் பஞ்சு.குமார் மற்றும் பலர் உள்ளனர்.



தருமபுரி மேற்கு மாவட்ட வழக்கறிஞர் அணி ஆலோசனைக் கூட்டம் மாவட்ட வழக்கறிஞர் அணி அமைப்பாளர் டி.சந்திரசேகரன் ஏற்பாட்டில் காரிமங்கலம் மாவட்டக் கழக அலுவலகத்தில் தருமபுரி மேற்கு மாவட்ட கழக செயலாளர் முனைவர். பி.பழனியப்பன் தலைமையில் நடைபெற்றது. கூட்டத்தில் வழக்கறிஞர் சேமநல நிதியாக தருமபுரி மேற்கு மாவட்ட கழகம் சார்பில் ரூ.5,00,000,(ஐந்து லட்சம்) வழங்கி வரும் ஜன 18 தேதி சென்னையில் நடைபெறும் வழக்கறிஞர்கள் மாநாட்டில் பெரும் திரளாக கலந்துகொள்வது, உள்ளிட்ட கழக வளர்ச்சிப் பணிகள் தொடர்பான ஆலோசனைகள் வழங்கி சிறப்புரை ஆற்றினார். உடன் மாநில சட்டதிட்ட திருத்தக் குழு இணை செயலாளர் இரா.தாமரைசெல்வன், மாவட்ட அவைத் தலைவர் கே.மனோகரன்,காரிமங்கலம் மேற்கு ஒன்றியச் செயலாளர் வழக்கறிஞர்.எம்.வீ.டி.கோபால், வழக்கறிஞர் பி.கே.முருகன்,மாவட்ட வழக்கறிஞர் அணி தலைவர் தீ.முனிராஜ் உள்ளிட்ட கழகத்தினர் உள்ளனர்.